காட்டாங்கொளத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின்
செயல்முறைகள்
முன்னிலை திரு.எம்.சிவகலைச்செல்வன்

நக.எண். 640/2026/ஆ5 நாள் - 23.03.2026

பொருள் : மனை உட்பிரிவு அனுமதி - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - குண்ணவாக்கம் ஊராட்சி - அனுமந்தை கிராமம் - திரு.E.பிரபாகரன் என்பவரின் சர்வே எண் - 133/6 & 133/7 ல் அமையும் மனையினை உட்பிரிவு செய்து அனுமதி அளித்து உத்திரவிடுதல் - சார்ந்து.

பார்வை : 1) திரு.E.பிரபாகரன் என்பவரின் மனைக்கான வரைபடங்கள் மற்றும் ஆவணங்களுடன் கூடிய கடிதம்.
2) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 9862/10பிள1 நாள்.17.02.2011.

******

பார்வை 1ல் காணும் காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குண்ணவாக்கம் ஊராட்சி அனுமந்தை கிராமம் திரு.E.பிரபாகரன் என்பவரின் சர்வே எண் 133/6 & 133/7 ல் அமையும் மனையினை உட்பிரிவு செய்து வழங்க வரைபடத்துடன் கூடிய ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார்.

வ எண்	சர்வே எண்	மனை எண்	மனைப் பரப்பளவு (சதுர அடியில்)	உட்பிரிவு மனை எண்	உட்பிரிவு மனையின் பரப்பு (சதுர அடியில்)
1	133/6 & 133/7	-	8443	1	1202
				2	1320
				3	1337
				4	1311
				5	1378
				6	857
				7	1038
Grand Total			**8443**		**8443**

பார்வை 2-ல் காணும் சென்னை நகர் ஊரமைப்பு அவர்களின் செயல்முறைகளின் படி, 15(i) ஒரு குடியிருப்புக்கு மேல் அதிகார வரம்புக்குள் திட்ட அனுமதி வழங்கப்படும் உத்தேசங்களுக்கு மேற்காணும் விதிகளை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி தளர்த்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் மனைகளுக்கான மனை உட்பிரிவு கட்டணம் **ரூ.60110/-** (ரூபாய் அறுபதாயிரத்து நூற்று பத்து மட்டும்) **UN APPROVED LAYOUT PLOT REGULARISATION BDO VP** என்ற பெயரில் இந்தியன் ஓவர் சீஸ் வங்கியில் 23.03.2026ல் செலுத்தப்பட்டுள்ளதின் அடிப்படையில் மேற்காணும் விவரப்படியான மனைகளுக்கு கலம் எண் (6)ல் கண்ட சதுர அடி பரப்பளவிற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனை உட்பிரிவு அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.

2. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

3. இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைத் தடை ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

4. மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலையை தடைபடாமல் அதன் நிலையில் நிலை நிறுத்தப்பட வேண்டும்.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
காட்டாங்கொளத்தூர்.

23.03.26

பெறுநர்

Thiru.E.Prabakaran,
No 116, 1st Floor,
S Block, 6th Main Road 20th Street,
Anna Nagar, Chennai-600 040

நகல்

ஊராட்சி மன்ற தலைவர்,
குண்ணவாக்கம் ஊராட்சி.